TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் IX.] **MAY, 1909-௵ மேமீ.** [இலக்கம் 2.

சென்னை ஜீ. ஹி. நி. சங்கத்தின் 28-வது வருஷாந்த மஹா சபை.

இச்சங்கத்தின் 28-வது வருஷத்திய மகோற்சவ மஹா சபை, சென்ற மார்ச்சுமீ 30ந் தேதியன்று வழக்கம்போல் மாட்சிமை தங்கிய நமது சென்னைக் கவர்னரவர்களின் அனுமதியின்பேரில் அவருடைய அரண்மனையின் சமீபத்திலிருக்கும் பியாங்குவெட்டிங் ஹால் என வழங்கும் கவர்ன்மெண்ட் கட்டடத்தில் கூடியபோது, கவர்னரவர்களாகிய ஸர் ஆர்தர் லாவி பிரபுவே அக்கிராசனத்தில் வீற்றிருந்தனர். அச்சபையோரால் அங்கீகரிக்கப்பட்ட சென்ற 1908-ம் வருஷத்திய ரிப்போர்ட்டில் கூறியுள்ள அம்சங்கள் வெகு ஜனங்களுக்கு விளங்க அடியில் வருமாறு கூறுகின்றனம்.

"1908-ம்வருஷத்தில்வசூலானபொருட்சகாயம் குறைவாயிருந்தும், இச்சங்கத்தின் காரியங்கள் அமரிக்கையாயும் திருப்திகரமாயும் நடந்தேறிவந்தன. ஜனங்கள் வேண்டுமென்று ஜந்துக்களுக்குச் செய்யும் ஹிம்சையினின்றும் ஜந்துக்களைப் பாதுகாக்கும்பொருட்டேயன்றி, அவ்வித ஹிம்சை செய்வதனால் ஜனங்களுக்கு நேரிடும் பலவித தீங்கினின்றும் ஜனங்களைக் காப்பதற்கும் இச்சங்கம் ஏற்பட்டிருக்கிறது. கனம்பொருந்திய நீதியதிபராகிய பாடெம் துரையவர்கள் இச்சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியத்தினின்றும் நீங்கவே, அவருக்குப் பதிலாகச் சென்ற வருஷாந்த மஹா சபையில் ஹைக்கோர்ட்டுப் பிரதம நீதியதிபராகிய கனம்பொருந்திய ஸர் சார்லஸ் ஆர்னால்ட் ஒயிட் துரையவர்களை ஏகோபித்து அக்கிராசனாதிபதியாக நியமித்தார்கள். அச்சமயத்தில், இச்சங்கவிஷயமாகப் பாடெம் துரையவர்கள் செய்த நற்காரியங்களின்பொருட்டு அவர் ஞாபகார்த்தமாக அவருடைய உருவச்சிலை யொன்றை நாட்டவேண்டுமென்ற ஒரேற்பாடு செய்யப்பட்டு அதற்குப் பொருள் வசூல் செய்வதற்குக் கனம்பொருந்திய ஸர் ஆர்னால்ட் ஒயிட் துரையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு சபையும் நியமிக்கப்பட்டது. பாடெம் துரையவர்களின் நற்குண நற்செய்கைகள் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. இச்சென்னையில் பொது ஜன நன்மைக்காகச்செய்யப்பட்ட எந்தக்காரியத்திலும் அவர் சம்பந்தப்பட்டே யிருந்தனர். அவருடைய அக்கிராசனத்தின்கீழ் இச்சங்கம் அதிக விருத்தியடைந்து, ஜந்துக்களின் வைத்தியசாலை யொன்றும், வேலை செய்யச் சக்தியற்ற ஜந்துக்களுக்குப் பஞ்சரபோல் என்னும் ஆசிரயமொன்றும், நாய்களுக்கோர் ஆசிரயமும் உண்டாயின. அவருடைய உருவச்சிலைக்காகப் பணம் சேகரிக்கத் தொடங்குகையில் திடீரென அவருடைய மரணச்செய்தி தெரியவந்தது. உடனே நிர்வாக சபையார் சபை கூடி அவர் மரணத்தினால் இச்சங்கத்துக்குண்டான பெருத்த நஷ்டத்தையும் தம் துயரத்தையும் குறித்து வைத்தார்கள்.

இச்சங்கம் பெருமை பாராட்டிக்கொள்ளத்தக்க அம்சமொன்றுண்டு; அதாவது இச்சங்கத்தின் காரியங்களில் பொதுஜனங்களும்

ஒற்றுமைப்பட்டுக் கலந்து வருவதேயாம். இதற்குமுன், பொது ஜனங்கள் ஜந்துக்களின் பாதுகாப்பில் கொஞ்சமேனும் சிரத்தையெடுத்துக்கொள்ளாமலும், அந்த வேலை இச்சங்கத்தையே பொறுத்ததென்று நினைத்தும் வந்தார்கள். யாராவது ஜந்துக்களை ஹிம்சிப்பதைக் கண்டால் அதை நிறுத்தச் சங்கத்தின் உத்தியோகஸ்தர் யாரேனும் அருகிலிருக்கிறார்களா வென்று தேடிச் செல்வார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் தாங்களே பிரவேசித்து அக்கொடுந் தொழில்களைத் தடுப்பது தங்கள் கடமையென்பதையறியாமலிருந்தார்கள். இப்பொழுது சில வருஷங்களாக இவ்விஷயத்தில் ஓர் மாறுதல் உண்டாயிருக்கிறது. ஜனங்கள் தாங்களே ஜீவ ஹிம்சைகளைத் தடுக்க முயல்வதனாலும், அவைகளைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதனாலும், அநேகர் சட்ட தண்டனைக்குள்ளாவோமென்கிற பயங்கொண்டு அப்படிப்பட்ட குற்றங்களை வீதிகளில் பகிரங்கமாகச் செய்கிறதில்லை.

ஆவரணங்களிலிருக்கும் எண்ணெய்ச் செக்குகளில் பகல் காலத்திலும் நடக்கும் கொடிய ஹிம்சைகளும், வண்டிகளில் அதிக பாரமான சுமையேற்றுதல், அதிக தூரம் வண்டிகளை யோட்டிச் செல்லுதல், மாடுகளையும் குதிரைகளையும் நோயுள்ள இடங்களிலும் காற்றடைப்பான தொழுவங்களிலும் கட்டிவைத்தல், அவைகளுக்குக் குறைவான தீனிபோடுதல், இடையர் கன்றுகளுக்குப் பால் விடாமலும் தகுந்தபடி பரிபாலியாமலும் தோலு மெலும்புமாய்க் கழியவிடுதல் முதலிய கொடுஞ்செய்கைகளுக்காகத் தண்டனைக் குட்படுத்துவது கஷ்டமாயிருக்கிறது. அவைகளைத் தடுக்க இச்சங்கத்தின் நண்பர்களனைவரும் தங்களால் இயன்றமட்டும் பிரயத்தனப்படுவார்களெனக் கோருகிறோம். வாடகை வண்டிக்காரர்கள் தங்கள் குதிரைகளுக்குக் குறைவாகத் தீனி போடுதல், அவைகளை இழுக்கமுடியாத பெரிய வண்டிகளில் பூட்டுதல் முதலிய குற்றங்களைக் கண்டிக்கும்பொருட்டு, வண்டிகளுக்கு லைசென்சு கொடுக்கும்போது, அதில் குதிரைகளின் அடையாளங்களையும் குறிப்பிட்டு அவற்றைக் கவனித்துக்கொண்டு வருவது உசிதமாயிருக்குமென்று இச்சங்கத்தாருக்குத் தோற்றுகிறது.

மனிதருக்கு அடங்கி ஆதரவற்றிருக்கும் ஜந்துக்களைக் கொடூரமாய் நடத்துவதனால் நம்முடைய மனச்சாட்சிக்கொவ்வாத கொடுமையைச் செய்கிறோமென்பதை எல்லாருக்கும் நியாயமான வழிகளால் தெரியப்படுத்த வேண்டுமென்பதே இச்சங்கத்தின் பிரதான நோக்கம். இதற்காகச் சிறு புத்தகங்களும் பத்திரிகைகளும் இச்சங்கத்தாரால் பிரசுரஞ் செய்து இனாமாகக் கொடுக்கப்படுகின்றன. மேலும், வாயில்லாப் பிராணிகளிடத்தில் வெகு ஜனங்களுக்குப் பிரீதியை யுண்டாக்கி அவைகளின் துன்பத்தைக் குறைக்கும்பொருட்டு, இச்சங்கத்தால் "ஜந்து வர்த்தமான ஸாரம்" என்னு மொரு பத்திரிகையும் தமிழிலும் தெலுங்கிலும் மும்மாதத்துக் கொருமுறை பதிப்பிக்கப்பட்டு இலவசமாகப் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. சென்னை ராஜதானியிலுள்ள பிரசித்தமான பாடசாலைகளின் மாணாக்கர்கள் இங்கிலீஷிலாவது தேச பாஷைகளிலாவது எழுதியனுப்பும் உபந்நியாசங்களில் உத்தமமான இரண்டுக்குப் பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட கீர்த்தி முத்திரைப் பதக்கங்களும் கொடுக்கப்படுகின்றன.

சென்ற டிசெம்பர் மாதத்தில் மாட்சிமை தங்கிய கவர்னரவர்களின் பரிபாலனத்தின் கீழ் ஜந்துக்களின் காட்சி யொன்று நடந்தது. வெளியூர்களிலிருக்கும் உபசங்கங்களின் காரியங்களும் சரியாய் நடந்துவந்தன. இச்சங்கத்தின் ஜந்து வைத்தியசாலைக்கு இவ் வருஷத்தில் 2,450 ஜந்துக்கள் அனுப்பப்பட்டதைப் பார்க்குமிடத்து இந்த வைத்தியசாலையின் உபயோகம் பொது ஜனங்களால் அங்கீகரிக்கப்படுகின்றதென்பது தெளிவாய் விளங்குகிறது. விஜயநகரம் மஹாராஜ குமாரிகா ஸாஹிபா அவர்கள், மடோகாட் எஸ்டேட்டின் மஹாராணி ரீவா அவர்களினுடைய உதாரகுணத்தினாலும் மற்றும் சென்னை ஜனங்களின் உதவியினாலும் ஸ்தாபிக்கப்பட்ட பஞ்சரபோல் என்னும் ஆசிரயத்தின் வேலையும் நன்றாய் நடந்துவந்தது. இந்த ஆசிரயம் வேப்பேரியிலிருந்து கொண்ணூருக்குப் போகிற ஹைரோட்டில் 12 எக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாசிரயம் இந்த இராஜதானி முழுமைக்குமே ஏற்பட்டிருப்பதாலும், இம்மாதிரி ஆசிரயம் தென் இந்தியா

வில் இதுதான் முதலாவதாக இருப்பதனாலும், சென்ற வருஷத்தில் பொது ஜனங்கள் புரிந்த உதவி போதாமையாயிருப்பதாலும், இராஜாக்கள், ஜமீன்தார்கள், நாட்டுக்கோட்டைச் செட்டிகள், ஜைனர்கள், குஜராத்தியர் முதலிய தருமாத்மாக்கள் முன் வந்து, வேலை செய்ய முடியாத ஜந்துக்களை அவை சகஜமாய் இறக்கும்வரையில் காப்பாற்றுகிற இந்த ஆசிரயத்திற்கு மிகுந்த பொருளுதவி செய்வார்களெனக் கோருகின்றோம். இவ்வாசிரயத்திற்குச் சென்ற வருஷம் 10 குதிரைகள், **2** எருதுகள், 9 பசுக்கள், 2 எருமைகள், 6 ஆடுகள், 1 கழுதை ஆக மொத்தம் **30** ஜந்துக்கள் அனுப்பப்பட்டன. மிஸ்டர் ஜென்சென் என்னும் மாந்திரிகர் இவ்வாசிரயத்திற்கு 50 ரூபாய் அனுப்பினதைப்பற்றி மிகவும் சந்தோஷிக்கிறோம்."

மேற்கண்ட ரிப்போர்ட்டைச் சபையார் அங்கீகரித்து, இவ்வருஷத்திற்குக் காரிய நிர்வாக சபையாரை நியமித்தபிறகு, அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த கவர்னர் துரையவர்களும் இன்னும் சில ஐரோப்பிய இந்தியக் கனவான்களும் இச்சங்கத்தின் நன்மைகளைக் கொண்டாடி, ஜனங்களுக்கு இச்சங்கத்தின் காரியங்களி விருக்கவேண்டிய ஊக்கத்தைக் காட்டிப் பல பிரசங்கங்களைச் செய்தபின் மஹா சபை கலைந்தது.

பூனையும் பதவியைத் தரும்.

கிறிஸ்து பிறந்த 14—வது நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் ஒரு சிறிய குக்கிராமத்தில் டிக் விட்டிங்டன் என்றொரு சிறுவனிருந்தான். அவனுடைய சிறுவயதிலேயே தாய்தந்தையர் காலஞ்சென்றதனால் அவன் எங்கும் போய் வேலைசெய்யச் சக்தியற்றவனாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில், ஒரு கிழவி அவனைக் காப்பாற்ற ஒப்புக்கொண்டாள். சில நாள்களுக்குள் அக்கிழவியும் இறக்கவே ஒன்றும் செய்யத் தோன்றாதவனாய் அவன் லண்டன் நகரத்துக்காகிலும் போய் ஒரு வேலையைச் சம்பாதிக்கலாமென்றெண்ணிப் புறப்பட்டான். அப்படியே போய்ச் சேர்ந்தவுடன் அங்கே ஓர் பெரிய வர்த்தகனிடத்தில் வேலை கிடைத்தது. அவ்வீட்டில் சமையல் வேலை செய்யும் கிழவியொருத்தி அவனை மிகவும் வருத்திக் கொண்டுவந்தாள். இச்செய்தியறிந்த அவ்வர்த்தகனுடைய மகள் அவனைத் தேற்றிக்கொண்டு வந்தாள். இவ்வாறு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில், ஓர்நாள் ஒரு ஸ்திரீ தன் பூனையைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்து அவன் அப்பூனையை எனக்குக் கொடுப்பாயா என்று கேட்க, அவள் ஒரு அணா கொடுத்தால் தருவதாகச் சொன்னாள். அவன் அதை அவ்விலைக்கு வாங்கித் தன் உணவிலிருந்து சிறிது அதற்கிட்டு வளர்த்து வந்தான். அப்பூனையோ மிக்க அறிவுடையதானதினால் தன் எஜமானனிடத்தி லதிக விருப்பங்கொண்டு அவன் படுக்கும் அறையில் உள்ள எலிகளின் உபத்திரவத்தைப் போக்கிற்று. இவ்வாறிருக்கையில் அவ்வர்த்தகன் வியாபாரத்தின்பொருட்டுப் பிறதேசங்களுக்குப் போகத் தன் கப்பலைச் சித்தப்படுத்தி வழக்கப்பிரகாரம் விற்பனைக்காகத் தங்களுக்குத் தோன்றின பொருள்களைக் கொண்டுவரும்படித் தன் வேலையாட்களைக் கேட்க, அவர்களும் தத்தம் சக்திக்கேற்ற சாமான்களைக் கொடுத்தனுப்பினார்கள். தான் அனுப்ப ஒரு பொருளுமில்லாமல் டிக்விட்டிங்டன் சிந்தித்துக்கொண்டிருக்கையில் வர்த்தகனுடைய மகள், "உன் பூனையை அனுப்பு" என்று இரகசியமாய்ச் சொல்ல, தனக்கு நண்பனாயிருந்த அப்பூனையை விட்டுப் பிரிய மனமில்லாதவனாய்க் கடைசியில் அதை அனுப்பினான். அப்பெண் அந்தக் கப்பலதிகாரியிடஞ் சென்று அந்தப் பூனையின் நன்னடக்கை சாமர்த்தியம் இவற்றைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து அப்பூனையை எப்படியாகிலும் திருப்பிக் கொண்டுவரும்படிச் சொன்னாள். அந்தக் கப்பல் பிரயாணப்பட்டுச் செல்லுகையில் ஓர் பெருங்காற்றடித்து அக்கப்பல் பிரயாணப்பட்ட ஊருக்குப் போகாமல் ஆப்பிரிக்கா தேசத்துக்குச் சமீபமாக ஓர் ஊரின் கரையோரத்தில் போய்ச் சேர்ந்தது. இக்கப்பல் வந்திருக்கும் செய்தியை அவ்வூராசனுக்குத் தெரிவிக்க, அவ்வரசன் சில ஆட்களை யனுப்பினான். அவர்கள் கப்பலதிகாரி முதலியவர்களை எதிர்கொண்டழைத்துச் சென்றார்கள். அரசனும் அரசியும் அக்கப்பலாள்களுக்கு ஓர் விருந்திட்டனர். அவ்விருந்தில் ஆகாரங்களைப் பரிமாறினவுடன் வழக்கப்படி அநேகம் எலிகள் ஒன்றின்பின் ஒன்றாய் வந்து அங்கே

வைத்திருந்த உணவுகளை முழுமையும் தின்றுபோயின. அதற்காக வெட்கப்பட்டு அவ்வரசன் ஒன்றுந் தோன்றாமலிருக்க, கப்பலதிகாரி "இதற்கோர் மருந்திருக்கின்றது, அதைக் கொண்டுவரட்டுமா" வென, அவர் "இந்த எலிகளின் உபத்திரவத்தைப் போக்குபவர்களுக்கு எவ்வளவு பொருளாயினும் கொடுப்போம்" என்றார். அந்த அதிகாரி, டிக்கு அனுப்பின பூனையைக் கூடையுடன் கொண்டுவரும்படித் தன் வேலையாட்களுக்குக் கட்டளையிட, அவர்கள் அதை மெல்லக் கொண்டுவந்தார்கள். இவ்வாறவர்கள் அப்பூனையை வெளியிட்டவுடன், அது அங்கிருந்த எலிக்கூட்டத்தில் சிலவற்றைக் கொன்றும் சிலவற்றைக் காயப்படுத்தியும் பின்னும் சிலவற்றைத் தொந்தரவுசெய்தும் ஓட்டிவிட்டது. இந்த வியப்பைக் கண்ட அரசனும் அரசியும் அப்பிராணியைத் தங்களுக்கே கொடுக்கும்படிக் கேட்டனர். அதற்கவ்வதிகாரி அப்பூனையின் சொந்தக்காரனுக்கு அதன்மேலுள்ள பிரீதியைத் தெரிவித்து, அதற்குப் பதிலாக அதன் குட்டிகளில் சிலவற்றைக் கொடுப்பதாகச் சொன்னார். அவர்களும் சம்மதித்து சில குட்டிகளைப் பெற்றுக்கொண்டார்கள். அக்கப்பலோட்டிகள் தாம் அங்கே வந்து நெடுநாளானதினால் தம்மூருக்குப் போக எண்ணங்கொண்டிருப்பதை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசனும் பிரியத்துடன் தான் சொல்லியபடி அப்பூனையின் சாமர்த்தியத்திற்காகவும், அது பெரும் உபத்திரவத்தைத் தொலைத்ததற்காகவும் அதனுடைய இடைக்குப் பத்துமடங்கதிகமாய் உயர்ந்த பொன்னை வெகுமானம் கொடுத்தனுப்பினான்.

இங்கே இவ்வாறிருக்க விட்டிங்டன் தன் நண்பனான பூனையும் இல்லாததினால் கிழவியின் இம்சைகளைப் பொறுக்க முடியாதவனாய் அவ்வீட்டை விட்டுப் போக யோசித்துச் சென்று ஓர் பாறையின்மீது பாதிநித்திரையாகப் படுத்திருக்கையில், அருகிலிருக்கும் ஓர் கோயில்மணி யடிக்கத் தொடங்கிற்று. அவ்வோசை, "லண்டன் நகரத்து லார்டு மேயராகிய ஓ விட்டிங்டன்! விட்டிங்டன்! உன் எஜமானன் வீட்டுக்குத் திரும்பிச் செல்" என்பதுபோல அவனுக்குக் கேட்டது. அவன் இதைக் கேட்டு மிக்க வியப்புற்றவனாய் மறுபடி வீட்டுக்குச் சென்றான்.

உடனே கப்பலும் வந்து சேர்ந்து நடந்த விருத்தாந்தமெல்லாம் அதிகாரியினால் வர்த்தகனறிந்து மிகவும் சந்தோஷப்பட்டு விட்டிங்டனைக் கூப்பிட்டு அவனுக்கு வந்திருக்கும் வெகுமதியைப் பெற்றுக்கொள்ளச் சொன்னான். அவன் அவ்வெகுமதி முழுவதும் தானே யடைய விரும்பாதவனாய் அதில் பாதியாகிலும் வர்த்தகனை யெடுத்துக்கொள்ளும்படி பிரார்த்தித்தான். அதற்கு வர்த்தகன் இஷ்டப்படாமல், "பொருளைப் பாதுகாக்க என் உதவி வேணுமானால் உதவி செய்கிறேன், ஆனால் அதி லெனக்கொன்றும் தேவையில்லை" யென்று டிக்கினிடம் சொன்னான். அவன் அதிக குதூஹலத்துடன் அங்கே தனக்குப் பிரியமுள்ளவர்களுக்கெல்லாம் அப்பொன்னிலிருந்து சன்மானம் செய்ததன்றி, தன்னை இம்சித்துவந்த கிழவிக்குக்கூடக் கொஞ்சம் தந்தான். பிறகு அக்கப்பலதிகாரி உனக் கின்னுமோர் வெகுமதி யளிக்கிறேனென்று சொல்லி அப்பூனையை அவனெதிரில் நிறுத்தினான். தனக்கிவ்வளவு சம்பத்தை விளைவித்த மிகுந்த நேசமுள்ள பூனையைப் பார்த்து மிகச் சந்தோஷித்து அதை யணைத்து முத்தமிட்டுக்கொண்டான்.

சிலநாளைக்குள் அந்த டிக்கும் பெரிய வர்த்தகனாகி தன் சம்பத்தை விர்த்திசெய்ததனால், ஆதியிலிருந்து தன்மேல் பிரியங்கொண்டு தனக் கிப்பதவி கிடைக்கச்செய்த ஆலீஸ் என்னும் அவ்வர்த்தகரின் மகளை விவாகம் செய்துகொண்டான். கடைசியாக மூன்றுதடவை லண்டன் நகரத்தின் லார்டு மேயர்ப் பதவியை யடைந்து, அவன் ஏழைகளிடத்தில் பிரியமுள்ளவனாய் அவர்களுக்குத் தகுந்த உபசாரணை செய்துகொண்டு, மிகவும் கீர்த்திபெற்று அப்பூனையினிடத்தில் நன்றியுள்ளவனாய் வெகுகாலம் வாழ்ந்திருந்தான்.

அவனுக் கிவ்வளவு அதிர்ஷ்டம் கிடைத்தது அப்பூனையாலல்லவா? ஆகையால் மிருகங்களுக்கும் அதிர்ஷ்டம் உண்டு என்பதை ஆராய்ந்து, அவைகளைப் பிரீதியுடன் ஆதரிக்கவேண்டும்.

யானைகளின் சம்ரக்ஷணை.

யானைகளின் தேகசௌக்கியம், வியாதிகள், அவைகளுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகள் முதலியவற்றைக் குறித்து மிகவும் உபயோகமான புத்தகமொன்று பிரசுரஞ் செய்திருப்பவர் பர்மா தேசத்தில் வாயில்லா ஜந்துக்களின் சிகிச்சை இலாகா சூபரிண்டெண்டெண்டான மேஜர் இவான்ஸ் துரையவர்கள். இவர் யானைகளின் சம்ரக்ஷணையைக் குறித்து ஓர் பத்திரிகையில் தம் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதன் சாராம்சமாவது:—

1. சில வருஷங்களாக யானைகள் மரங்களை யோரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக்கொண்டுபோகும்வேலைக்கு விசேஷமாய் உபயோகிக்கப்படுகின்றன. அவைகளை இவ்விதமாயுபயோகிப்பதாலும், அவைகள் அநேகமாய் நோயினு லிறந்துவிடுவதா லுண்டாகும் பெருத்த நஷ்டத்தாலும் அவைகளின் விலைகள் யதிகமானதன்றி, அவைகளின் சுகத்துக்கு வேண்டிய உபாயங்களைக் கவனிக்கவேண்டிய அவசியமும் நேரிட்டு மிருக்கிறது. அநேகமாய் ஐரோப்பியர்களுக்கு யானைகளைப்பற்றி ஒன்றும் தெரியாததால் சாதாரணமாய் அவை இத்தேசத்தாராலேயே வளர்க்கப்பட்டு வருகின்றன. அவற்றின் தேக ஸ்திதியையும் சௌக்கியத்தையும் நன்றாய்க் கவனித்து அவற்றை வளர்த்துவந்தால் யானைகளை அநேக வேலைகளுக்கு உபயோகிக்கலாம். அவைகளின் பெருத்த உருவத்தைப் பார்த்து அவை எவ்வளவு வேலையாயினும் செய்யக்கூடுமென்று நாம் எண்ணக்கூடும். அவைகளின் பழக்கத்தையும் தேகக்கூற்றையும் பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியாததே, நாம் அப்படி நினைக்கவும் அவைகளுக்கு அடிக்கடி நோய்கள் உண்டாகவும் காரணமாயிருக்கிறதென்று சொல்லலாம். அவைகளின் தேகக்கூறு அதிக அருமையானது. அவற்றினிடத்தில் அதிக வேலை வாங்குவதாலும், அவற்றிற்கு நமக்கிஷ்டமானபடி எந்தவிதமான தீனியையாவது கொடுப்பதனுலும், வீடுகளில் வளர்க்கப்படும் மற்றப் பிராணிகளைவிட அவற்றிற்கு அதிகமான நோய்கள் உண்டாகின்றன. ஏதாவது நோயினல் பீடிக்கப்பட்டு அவைகளின் தேகஸ்திதி மாறுமானல், மற்றெல்லாப் பிராணிகளைவிட, இவைகளை மறுபடியும் பழைய சௌக்கிய ஸ்திதிக்குக் கொண்டுவருவது மிகவும் கஷ்டம்.

2. அவைகளை ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கத் தெரிந்துகொள்ளவேண்டிய அம்சங்களில் முக்கியமானவை அவற்றின் இயற்கையான வழக்கங்களேயாம். அவ்வழக்கங்களை அனுசரித்தே நம்மோடு பழகும் யானைகளையும் பாதுகாக்கவேண்டிய தவசியம். அவைகள் இயல்பாகவே இராப்பிராணிகள்; அதாவது தீனிக்காக அவை இராக்காலங்களில் சஞ்சரிக்கும்; பகல் காலங்களில் மரநிழல்களில் படுத்துறங்கும்; வெட்டவெளியான காடுகளில் மத்தியானங்களில் அவைகள் இங்குமங்கும் திரிவதையொருவரும் கண்டதில்லை; மழைக்காலங்களில் அநேகமாய் அவைகள் அப்படித் திரியக்கூடும்; ஏனென்றால் மழையினல் வெப்பம் தணிந்திருக்கும். சூரிய வெப்பத்திலே அவைகள் திரியுமானல். அவைகளுக்கு தேக அசௌக்கிய முண்டாகுமென்றும் தெரிகிறது. அவைகள் இராக்காலத்தில் மேயஆரம்பித்து விடியற்காலவரையில் தீனிதின்றுகொண்டேயிருக்கும்; பிறகு அவைகள் உறங்குவதற்குக் கொஞ்சம் முன் பகலிலும் ஆகாரத்தைச் சாப்பிடும். அவைகள் சாய்வான உயர்ந்த தரையின்பேரில் படுக்க இஷ்டப்படுகின்றன. மேடாயிருக்கும் தரை ஈரமில்லாமலும் இராக்காலங்களில் குளிர்ந்து மிருக்கும். அவைகள் தூங்குகிற நேரம் சொற்பமாதலால் அவைகள் அந்நேரத்தில் தடையின்றி நன்றாய்த் தூங்கும்படிப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவைகளுக்குப் போடும் ஆகாரத்தையெல்லாம் இரவு முன்னேரத்திலேயே போட்டுவிடவேண்டும். சாதாரணமாய் அவைகள் விடியற்காலத்திலும் சாயங்காலங்களிலும் குளிக்கும். கோடைகாலத்தில் அவைகள் நடுப்பகலில்கூடக் குளிக்கும். மரங்களடர்ந்த கற்பாறைகளிலிருந்து சுரக்கும் குளிர்ந்த ஊற்று நீர்தான் அவைகளுக்கு மிக்க இன்பமாயிருக்கும். பெரிய ஆறுகளில் நீராடும்போது நாணலடர்ந்த இடங்களை அவை விரும்பும். அவைகள் நீராடும்போது குடம் குடமாக நீருருகும்.

3. உப்பு உண்பது அவைகளுக்கு வெகு பிரியம். அவை யுப்புச் சுரங்கங்களுக்கு

அடிக்கடி போய்விடும். யானைகள் உப்புச் சுரங்கங்களிலிருந்து சுரந்துவரும் நீரை வெகு பிரியமாய்க் குடிக்கும். அவைகள் மண்ணையும் தின்னும். அவைகள் நடுராத்திரியில் 3 அல்லது 4 தடவை அச்சுரங்கங்களுக்குப் போவதுண்டு. அவைகள் அங்கேபோய்ச் சேருகிறவரையில் அவற்றின் வரவு யாருக்கும் தெரியாது. அவைகள் கடலோரங்களிலிருக்கும் மண்ணைக் காலாலுதைத்து கட்டிக் கட்டியாகத் நின்றுவிடும். அவைகள் மண்ணைத் தின்பது அதிலுள்ள உப்புக்காகவே; அன்றியும் அவைகள் மண்ணைத் தின்பதால், அதுவே அவைகளுக்குப் பேதிக்கு மருந்துமாம். யானைகள் நல்ல பரிசுத்தமான ஆகாரத்தையே தின்னும். அவைகள் ஆகாரமின்றிப் பசியோடிருந்தாலொழிய அசுத்தமான தீனியைச் சாப்பிடா. யானைகள் தங்கள் உணவை அதிகமாய்க் கழிக்கா. தெரியாமையினால், பழகிய யானைகளுக்குக் குறைவாகத் தீனி போட்டு வருகிறார்கள். ஒரு யானைக்கு நாளொன்றுக்கு 600 முதல் 800 இராத்தல் வரை ஆகாரம் கொடுக்கவேண்டியிருக்க, ஜனங்கள் 200, 300 இராத்தல்தான் கொடுக்கிறார்கள். நாம் வேலை வாங்கும் ஒவ்வொரு யானைக்கும் 600 இராத்தலுக்குக் குறையாமல் நல்ல தீனி கொடுக்கவேண்டும். வேலை வாங்கினால் நல்ல தீனி கொடுக்கவேண்டும் என்கிற பழமொழி யானைகளுக்கு மிகவும் பொருந்தியதா யிருக்கிறது. மிகப் பெரிய பட்டணங்களில் தீனி அகப்படுவது மிகவும் கஷ்டம். தீனியை மாற்றுவது முக்கியம். யானையை அப்போதைக் கப்போது மேய்ச்சலுக்காகக் காட்டுக்குக் கொண்டு போனாலொழிய அது வருஷமுழுவதும் ஒரேவிதமான தீனியின்பேரி லிருக்கவேண்டியதாகும். நடப்பதுதவிர வேறு வேலையில்லாமலிருக்கும் காட்டானைகளே அநேக வகையான தீனிகளை யுண்கின்றன. அப்படியிருக்க, கஷ்டமான வேலைகளைச் செய்யும் பழகிய யானைகள் ஒரேவகையான தீனியைத் தின்று இவ்வளவு நல்ல ஸ்திதியிலிருக்கிறதைப் பார்க்க ஆச்சரியமாகத்தா னிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

பாதையில்லாமல் மிருகங்களின் உயிரை மாய்த்தல்.

லண்டனில் பாட்டர்சீ என்னுமிடத்தில் "லிதால் சேம்பர்" என்னும் ஒரு பெட்டி செய்விக்கப்பட்டு, அதில் விடப்படும் விஷக் காற்றைக்கொண்டு நாய், பூனை முதலான சிறிய ஜீவன்களைப் பாதையில்லாமல் கொன்று வருகிறார்கள். நாம் ஒரு நாயைக் கொல்லவேண்டுமானால் அந்நாயை "லிதால் சேம்பரில்" விட்டால் சிறிது நேரத்திற்கெல்லாம் திக்கு முக்கல்கொண்டு மாண்டுபோகிறது. "லிதால் சேம்பர்" இல்லாமல் வேறு விதமாகவும் கொல்ல மிஸ்டர் சூவெல் என்பவர் மூன்று விதங்கள் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது (Prussic acid) "புரஸிக் ஆஸிடை"க் கொண்டு விஷமேற்றுதல், "குளோரபார"த்தைக் கொண்டு மயக்கமுண்டாக்குதல், அனுபோகஸ்தர்களைக்கொண்டு தண்ணீரில் அமிழ்த்துவிடுதலேயாம். ஒரு பெரிய நாய்க்கு இரண்டு திராம் "புரஸிக் ஆஸிட்"விட்டால் அரை நிமிஷத்தில் மாண்டுபோய்விடும். "குளோரபாரம்" உபயோகித்தால் முதலில் நாயின் முகத்தைத் துணியினால் கட்டிவிட்டு மூக்கினிடமிருக்கும் துணியின்பேரில் இரண்டு மூன்று துளிகள் விட்டால் பாதையில்லாமல் தூங்குவதைப் போலவே மாண்டுவிடும். மிருகங்களைத் தண்ணீரில் அமிழ்த்தும்போது சரியாகச் செய்தால் வெகு சீக்கிரத்தில் பாதையில்லாமல் மாண்டுவிடும். கூட்டின் பக்ஷிகளையும், சீமைப் பன்றிகளையும், அணில்களையும், வளர்க்கும் எலிகளையும், சுண்டெலிகளையும் கொல்லவேண்டுமானால் கொஞ்சம் பஞ்சை எடுத்துக் "குளோரபாரம்" திராவகத்தில் நனைத்து அவைகளின் மூக்கின் சமீபத்தில் வைத்தால் உடனே மாண்டுவிடும். "குளோரபாரம்" அகப்படாவிட்டால் ஜலத்தில் சரியானவிதமாக அமிழ்த்துவிடுவது நலம். முயல்களைக் கொல்லவேண்டுமானால் அவற்றின் இரண்டு பின்னங்கால்களைப் பிடித்துக் கொண்டு தொங்கவிட்டுக் காதுகளின் கீழே ஒரு கொம்பைக் கொண்டு திடீரென்று ஓர் அடி அடித்தால் மாண்டுவிடும். முயல் பெரியதாகவிருந்தால் இரண்டுதரம் அடிக்க வேண்டும். புறாக்களையும், கோழிகளையும், வாத்துகளையும் கொல்லவேண்டுமானால்

அவைகளின் கழுத்தை க்ஷணத்தில் ஒடித்து விடவேண்டும். கழுத்தை ஒடித்து விட்ட பிறகு பக்ஷி துள்ளிக்கொண்டிருக்கும். அவ்வாறு துள்ளுவது பாதையல்ல. பிரதிகரண (Reflex action) செய்கைதான்.

இந்திரஜால வேடிக்கை கற்ற ஈக்கள்.

ஈக்களால் மனுஷருக்குத் தொந்தரவே யொழியப் பிரயோஜன மொன்றுமில்லை யென்று எண்ணியிருந்தோம். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எந்த ஜந்துவும் எவ்வளவு அற்பமாயிருந்தபோதிலும், அதுவும் ஓர் உபயோகத்திற்குத்தான் உண்டாக்கப்பட் டிருக்கிறதென்பது சத்தியம். ஆனால் மனிதன் மாத்திரம் அதைக் கண்டுபிடிக்காத குற்ற மொழியவேறொன்றுமில்லை. அதற்குத்திருஷ்டாந்தமாக ஈக்களைப்பற்றி மிஸ்டர் ஸ்மித் என்ற ஓர் சாஸ்திரி இராஜப் பொட்டகிராப் சங்கத்தில் ஓர் பிரசங்கஞ் செய்தார். அதில் ஈக்கள் அநேகம் அருமையான வேலைகள் செய்யக் கற்றுக் கொடுக்கப்படுகின்றன வென்றும், அவைகளிற் சில தங்கள் முதுகுகளின்மேல் படுத்துக் கொள்ளவும், சிறு இருப்புக் குண்டுகளைச் சுழற்றவும், தங்கள் உடம்பைவிடப் பெரிய பாரங்களை அந்தரத்தில் தூக்கவும், உருளுகிற சக்கரத்தில் ஏறவும், கண்ணுக்குப் புலப்படாத அத்தனை சிறிய பொம்மைகளை யெடுத்து ஆயாக்கள் செய்வதுபோலத் தாலாட்டவும், தூக்கவும், வைக்கவும் இதுமுதலான தொழிலைச் செய்யவும் பழகியிருக்கின்றன வென்றும், மேற்படி சாஸ்திரி சினே மாட்டோகிராப் என்ற அதி துரித புகைப்படங்களால் காண்பிக்கிறார். இந்த ஜந்துக்களின் மேற்படி அருமையான ஜாலங்களைப் பார்க்க ஆசிக்கிறவர்கள் பூதக்கண்ணாடியின் உதவியால் அவைகளைத் தரிசிக்கலாம். அல்லது சினே மாட்டோகிராப் படத்தில் பார்க்கலாம். சர்க்கஸ் ஆட்டத்தில் நாய்கள், குரங்குகள், குதிரைகள், யானைகள் ஆகிய இவைகளுக்கு எவ்விதம் கற்றுக்கொடுக்கிறார்களோ அவ்விதமே இந்த ஈக்களுக்கும் கற்றுக்கொடுத்து வைத்திருக்கிறார்கள். சிறு கூண்டுகளில் அவைகளை வைத்துப் போஷிக்கிறார்கள். ஆட்டம் துவக்கும்போது மாத்திரம் கூண்டைத் திறப்பார்கள். நாள்முழுவதும் நம்மை உபாதைப்படுத்தி நாம் சாப்பிடும்பதார்த்தங்களைச் சற்றேனும் கூச்சமின்றி அசுசிப்படுத்தும் நம்மூர் ஈக்களை மேற்படி வித்தைகளைக் கற்றுக்கொண்டு வரும்படி அந்த ஸ்மித் சாஸ்திரியிடம் அனுப்பினால் நமக்கு எவ்வளவு ஆறுதலாயிருக்கும்.—தேசாபிமானி.

நாயின் அறிவு.

இடையர் தங்கள் ஆடுகள் வழிதப்பிச் சிதறிப்போகாமலும் அவைகளுக்கு மோசம் வாராமலும் காக்கிறதற்கு நாய்களை வைத்திருப்பது வழக்கம். சில ஜாதி நாய்கள் இப்படிப்பட்ட வேலைக்கு நல்ல சாமர்த்திய முள்ளவை.

இதற்குத் திருஷ்டாந்தமாக, ஸ்காட்லாந்து தேசத்தில் ஒருவன் தன்னிடத்திலிருந்த ஒரு நாயைக்குறித்துச் சொன்னதாவது:— "என்னிடத்திலிருந்த நாய் எனக்கு அநேகவிதங்களில் உதவி செய்தது. அதற்கு நான் இடுகிற வேலை கஷ்டமாயிருந்தால் எத்தனையோ உபாயங்களைச் செய்து அதை முடிக்கும் அதிக இருட்டாயிருந்த ஒருநாள் இராத்திரி அர்த்தஜாமத்திலே எழுநூறு ஆட்டுக்குட்டிகள் திடீரென்று வெருண்டு பக்கத்து மலைச்சாரலிலே பல திக்குகளிலும் சிதறிப் போய்விட்டன. நானும் என் கூட்டாளியும் எங்களாலான பாடெல்லாம் பட்டு அவைகளை ஒரு வழிபடுத்தப் பார்த்தும் முடியவில்லை. ஐயோ! ஆட்டுக்குட்டிகளெல்லாம் போயினவே என்று நான் புலம்பினதைக் கேட்டு என்னுடைய நாய் உடனே புறப்பட்டுப் போயிருக்கலாம்; அந்த இருட்டிலே அது எங்கள் அருகில் இருந்ததும் இராததும் எனக்குத் தெரியவில்லை. நானும் என் மனுஷனுமாக வெகுதூரம் பொழுது விடிகிறவரையில் இரவெல்லாம் தேடித் திரிந்தும் ஒன்றையுங் காணாமல் சூரியன் புறப்பட்டபோது அலுத்துப்போய் நடந்ததை எஜமானனிடத்தில் தெரிவிக்கும்படியாக வெறுமனே திரும்பிவிட்டோம். திரும்புகாலில், ஒரு மலைச்சந்துக்குள்ளே ஒரே கும்பலாக ஆட்டுக்குட்டிகளையும், சந்து முகப்பில் எங்களை எதிர்பார்க்கிறதுபோல் சுற்றிலும் பார்த்துக்கொண்டு நின்ற எங்கள் நாயையும் கண்டோம். தப்பிப்போன ஆடு

களில் சேர்ந்தோடின சிலமாத்திரம் நாய்க்கு அடங்கி நிற்கின்றனவென்று நினைத்துக் கிட்டப்போய் எண்ணிப் பார்க்கையில், எழுநூறு ஆடுகளும் ஒன்றாவது குறையாமல் இருந்தன. இந்த நாய் அந்த அர்த்தராத்திரியில் ஒரு ஆடும் தப்பாமல் எல்லாவற்றையும் எப்படிக் கூட்டிப் பொழுதுவிடிகிறவரையில் பத்திரம் பண்ணிக்கொண்டிருந்ததோ எங்களுக்கே அதிசயமாயிருந்தது. எங்கள் அக்கம் பக்கத்திலுள்ள எல்லா இடையருங் கூடி என்ன முயற்சி செய்திருந்தாலும், இந்த ஒண்டி நாய் செய்து நிறைவேற்றின வேலையை ஒருபோதும் முடித்திருக்கமாட்டார்கள்.''

சமாசாரக் குறிப்புகள்.

1. **கால்நடைகளின் சந்ததி.**—கால்நடைமிருகங்களைப் பலியிடுதல், அவற்றின் மாமிசத்தைப் புசித்தல், தோலை விற்றுவிடுதல், பசுக்களுக்குச் சரியான ஆகாரத்தைக் கொடாமல் அதிகமாகப் பாலைக் கறந்துகொள்ளுதல், ரோகங்களுக்குத் தகுதியான சிகிச்சை செய்யாமலிருத்தல், நல்ல ரிஷபங்களை வளர்க்காமலிருத்தல் முதலான காரணங்களினால் கால்நடைகளின் சந்ததி நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போகிறது.

2. **கிளியைப்பற்றிய ஓர் விவாதம்.**—பூர்வத்தில் நியாயாதிபதியாயிருந்த சாலொமோன் காலத்தில் தீர்ப்புச்செய்யக் கஷ்டமாயிருந்த குழந்தையைப்பற்றிய விவாதத்தைப் போன்றதோர் தாவா சில நாட்களுக்குமுன் அமெரிக்காவில் ரையோடி ஜெனீரோ நகரத்திலிருக்கும் போலீஸ் அதிகாரியினிடத்தில் கொண்டுவரப்பட்டது. இரண்டு துரைசானிகள் ஒரு கிளி தன்னுடையது தன்னுடையதென்று இருவரும் போராடித் தத்தமக்குள்ள பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு அவ்வதிகாரியிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்தத் துரைசானிகளில் ஒருத்தி இக்கிளி இன்னின்ன வார்த்தைகளைப் பேசுமென்றும், மற்றவள் மேற்சொன்ன சொற்களைச் சொல்லமாட்டாது வேறு இந்த வார்த்தைகளைத்தான் பேசும் என்றும் சில சொற்களைச் சொன்னாள். அவ்விருவரும் சொன்ன சொற்களை அவ்வதிகாரி எழுதிக்கொண்டு, யோசித்துத் தீர்ப்புச்செய்கிறேன் என்று சொல்லி அவர்களை அங்கேயே நிறுத்திவைத்தார். நான்குநாள்வரைக்கும் அக்கிளியொன்றும் பேசாமலிருந்ததினால் நியாயாதிபதி தீர்ப்பொன்றும் செய்யாமலிருந்து, ஓரிரவு தான்மாத்திரம் அரை நித்திரையாயிருக்க மற்றவர்களெல்லாம் தூங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், அந்தக் கிளி துரைசானிகளிலொருத்தி சொன்ன சொற்களைமட்டும் சொல்லிற்று. இதைக்கேட்டு மறுநாட் காலையில், எந்த துரைசானியின் சொற்களைச் சொல்லிற்றோ அந்த துரைசானிக்கு அக்கிளியைச் சேர்ப்பித்தார்.

3. **ஆடுகள் நாய்களால் கொல்லப்பட்டன.**—இங்கிலாந்து தேசத்து எஸ்ஸெக்ஸ் மாகாணத்தில் சிலகாலத்துக்குமுன் ஓரிரவு ஆடுகள் நின்றிருந்த ஓர் வயலில் சில நாய்கள் சென்று அவ்வாடுகளை அவ்வயலின் ஓர் மூலைக்குத் துரத்திக்கொண்டுபோய், அவை ஒன்றின்மேலொன்று விழுந்து பாய்ந்து அவைகளில் 127 ஆடுகள் மூச்சுவிடக்கூடாமல் இறந்துபோகும்படிச் செய்தன. பிறகு ஆடுகளின் சொந்தக்காரன் வந்து பார்த்தபோது அவை சின்னபின்னமாய் ஒரே கும்பலாக 10 சதுரகஜமுள்ள இடத்தில் விழுந்துகிடந்தன. அதனால் அந்த இடையனுக்கு மிகுந்த நஷ்டம் நேர்ந்ததாம்.

4. **விசித்திரப்பூச்சி.**—இங்கிலாந்து தேசத்தில் கைகால் முதலிய அவயவங்களற்ற பாம்பைப்போலொத்த குருட்டுப்புழு என்னும் ஒருசிறு பூச்சியுண்டு. அதைத் தொட்டவுடன் இரண்டு துண்டாய்விடுகிறது. வாலாகிய துண்டு விசித்திரமாய் அரைமணி நேரம் துள்ளி யாடிக்கொண்டிருந்து பின் ஜீவனற்றுப்போகிறது. இதை நாம் உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கையில் முக்கியமாகிய அதன் துண்டு ஓடி ஒளிந்து தன் தேகத்தைச் சரிப்படுத்திக்கொண்டு அவ்வரைமணி நேரத்தில் முன்போல் வாலுள்ளதாய்விடுகிறதாம். இதென்ன ஆச்சரியம்!

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1909.